# கதம்பம்

ஏப்ரல் 2021



RICHMOND TAMIL SANGAM

# இந்த இதழில்....


- குறளும் பொருளும்
- திரையும் இசையும்
- சமூக வலைத்தளங்களில் பாதுகாப்பும் நெறிமுறைகளும்!
- சமையல் குறிப்பு
- ஜேம்ஸ் நதிக்கரையினிலே (ஒரு தொடர்)
- மூளைக்கு வேலை - புதிர்கள்
- கவிதைக் குவியல்
- திரைப்பட விமர்சனம்
- தமிழ்ப்பள்ளி மாணவர்கள்
- சிறுகதைகள்
    - பார்வை
    - வாழ்க்கை வாழ்வதற்கே
    - ஹிட்லர்
- விளையாட்டு விமர்சனம் (கிரிக்கெட்)
- உடல் நலக்குறிப்பு
- வாசகர் கருத்து படிவம்
- புதிர்களின் விடைகள்

# குறளும் பொருளும் (திருக்குறள்)

## குடிகாரப்பயலே, உங்கிட்ட பேசறதுக்கு சும்மா இருக்கலாம் [திருக்குறள்]

இந்தத் தலைப்பைப் போல பல நேரங்களில் திட்டு விழுவதை பார்த்திருப்போம், கேட்டிருப்போம்.

இன்னும் கொஞ்சம் மென்மையாக பெற்றோர் / ஆசிரியர் போன்றோரது "உன்கிட்ட விளக்கி சொல்றதும் அந்த சுவரிடம் சொல்றதும் ஒண்ணு" என்ற திட்டுகளும் காதில் விழுவது வழக்கம்.

எப்படித் திட்டினாலும் தவறிழைத்தவரை திருத்தும் அக்கறை இருப்பதால்தானே கடிந்து கொள்கிறார்கள்.

திருக்குறளில் நட்பியல் என்ற பிரிவில் கள்ளுண்ணாமை என்ற அதிகாரம் எதுக்கு என்று எண்ணிப் பாருங்கள். வள்ளுவரின் அக்கறை புரியும். நண்பர்கள் ஒன்று கூடும் இடத்தில் கள் (மது/ சாராயம்/சரக்கு) தோன்றி "அருள் பாலிப்பது" எப்போது இருந்தே வந்திருக்கிறது. உடல்நலத்துக்கும், மனநலத்துக்கும் குறிப்பாக நட்புக்குமே வேட்டு வைப்பது அறிவை மயக்கும் போதை என்பதால் நட்பு என்னும் பிரிவில் அந்த அதிகாரத்தை வைத்திருக்கிறார்.

அதில் ஒரு குறள்,
"போதையில் இருக்கறவனிடம் logicக்கலாக பேசுவது, தண்ணிக்குள்ள முழுகினவனை தீப்பந்தம் எடுத்துகிட்டு போய் தேடுற மாதிரி" என்கிறார்.

உருப்படாத பயலே, நீ எங்க திருந்தப் போற, எரும மேய்க்கத்தான் லாயக்கு என்றெல்லாம் திட்டுவது உண்மையில் திட்டு வாங்குபவர் மீதான அன்பின்/ அக்கறையின் பொருட்டே அல்லவா? அது மாதிரியான ஒரு திட்டுதான் இது.

குடிக்காதே. போதை ஏறிப்போனா உனக்கு அறிவு இருந்தும் பயனில்லாது போகும். யார் என்ன சொன்னாலும் புரியாது. வெளிச்சம் கொடுக்கும் தீப்பந்தமே ஆனாலும் தண்ணீருக்குள் எடுத்துச் செல்ல முடியாது, அதேபோல உன் அறிவு பயன்படாது போகும். மூழ்கிப் போவாய் (drown). அந்நிலையில் உன்னிடம் பேசுவது தண்ணிக்குள்ள மூழ்கினவனை தீப்பந்தம் எடுத்துக் கொண்டு போய் தேடுவது போல் இயலாததாகி விடும், எனவே போதையில் வீழாதே என்பதை எல்லாம் ஏழு சொற்களில் இப்படிச் சொல்கிறார்.

**களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ அற்று**

களித்தான் = குடித்தவன் (போதையில் இருப்பவனிடம்)
காரணம் காட்டுதல் = குடியின் தீமையைப் பற்றி logical-லாக அறிவுறுத்தி பேசுதல்
கீழ்நீர்க் குளித்தான் = நீரில் மூழ்கியவனை
தீ = நெருப்பு (தீப்பந்தம்)
துரீஇ = தேடுதல்
அற்று = போன்றது

நவில் தோறும் நூல் நயம் என்று ஒரு குறள் இருக்கு. மிகச் சிறந்த நூலை படிக்கப் படிக்க இன்பம் தரும் என்று பொருள். படிக்கப் படிக்க நம் இன்பம் மட்டுமல்ல வியப்பும் கூடியபடியே இருக்கும் பெரும் படைப்பு திருக்குறள்.


ஐயனே வாழி நின் புகழ்.

**எழுதியவர்: உள்ளூர்க்காரன்**

# திரையும் இசையும் - தர்மவதி

இது **59** வது **மேளகர்த்தா** ராகம்.

சிருங்கார ரசத்தை அள்ளி தெளிக்கும் ராகம். ஹிந்துஸ்தானி இசையில் மதுவந்தி ராகத்தை ஒட்டி வரும் ராகம். கர்நாடக இசையில் பிரபலமான உபயோகத்தில் உள்ள மதுவந்தி, ரஞ்சனி, விஜயநகரி போன்ற ராகங்கள், இதில் ஜனித்தது.




கர்நாடக இசையில், முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய **பரந்தாமவதி ஜயதி**, ஊத்துக்காடு வேங்கட கவி எழுதிய **ஓடோடி வந்தேன் கண்ணா**, மைசூர் வாசுதேவாச்சாரின் படைப்பான **பஜன சேய ராதா** போன்ற கிருதிகள் பரவலாக பாடப்பட்டு வருபவை. பிடில் வித்வான் லால்குடி ஜெயராமன் அவர்களின் தில்லானாவும் பிரபலமான ஒன்றாகும்.

திரைப்படங்களில் இந்த ராகத்தில் அமைந்த பாடல்களின் ஒரு சில:

| திரைப்படம் | பாடல் | இசையமைப்பாளர் |
|---|---|---|
| உத்தரவின்றி உள்ளே வா | காதல் காதல் என்று பேச | எம். எஸ். விஸ்வநாதன் |
| அவன் ஒரு சரித்திரம் | அம்மானை அழகு மிகு | எம். எஸ். விஸ்வநாதன் |
| மன்மத லீலை | ஹலோ மை டியர் ராங் நம்பர் | எம். எஸ். விஸ்வநாதன் |
| நந்தா என் நிலா | நந்தா என் நிலா | வி. தக்ஷிணாமூர்த்தி |
| விக்ரம் | மீண்டும் மீண்டும் வா | இளையராஜா |
| வருஷம் பதினாறு | ஹே அய்யாசாமி | இளையராஜா |
| காயத்ரி | வாழ்வே மாயமா | இளையராஜா |
| வீரா | கொஞ்சி கொஞ்சி மலர்கள் | இளையராஜா |
| உனக்காகவே வாழ்கிறேன் | இளம் சோலை பூத்ததா | இளையராஜா |
| ரோசாப்பூ ரவிக்கைக்காரி | என்னுள்ளில் எங்கோ ஏங்கும் | இளையராஜா |
| ஜென்டில்மேன் | ஒட்டகத்த கட்டிக்கோ | ஏ. ஆர். ரஹ்மான் |
| அழகன் | தத் தித் தோம் | மரகதமணி |
| **7G rainbow** காலனி | கனா காணும் காலங்கள் | யுவன் ஷங்கர் ராஜா |

**தொகுப்பு : நாராயணன் சுப்ரமணியன்**

# சமூக வலைத்தளங்களில் பாதுகாப்பும் நெறிமுறைகளும்!

இக்காலத்தில் Facebook அல்லது Whatsapp மற்றும் சில பிரபல சமூக வலைதளக் கருவிகளை உபயோகப் படுத்தாத நபர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அவர்களில் பெரும்பாலானோர் சமுதாயத்திலிருந்து விலகி இருக்கும் வினோத மனிதர்களாக இருப்பார்கள். உபயோகப் படுத்தி நேரத்தை விரயமாக்குவது என்பது உறுதி, அதில் சில நெறிகளையும் பாதுகாப்பையும் கடைப்பிடிக்கலாம் என்பதே இந்தப் பதிவின் நோக்கம்.

முதலில் நெறிமுறைகள். நம் பதிவுகளையோ, அல்லது மற்றவர் பதிவின் மீதுள்ள விமர்சனங்களையோ நாகரீகமாகப் பதிவிட பெரும்பாலோர் தவறி விடுகிறார்கள். நண்பர்களைச் சேர்க்கும்போது ஆர்வமாக குடும்பத்தினர், உறவினர்கள், அலுவலக சக ஊழியர்களை சேர்த்து விட்டு பெருமை அடைகிறோம். நம் கருத்தை நாகரீகமற்ற முறையில் வெளியிடும்போது, நம் மேல் அவர்கள் வைத்திருக்கும் மதிப்பு சேதம் அடைகிறது என்பதை பெரும்பாலானோர் உணர்வதில்லை. நம் privacy settings சரியாக இல்லாவிட்டால், நாம் like செய்யும் செய்திகள், நண்பர்களின் feed இல் தெரிய வந்து தர்ம தர்மசங்கடத்தை உண்டாக்கும். திரைப்படச் செய்திகளை உடன் like செய்யும் ஒரு நண்பர், நான் கூறும் வரை அதை உணரவில்லை. நாம் like செய்யும் பதிவுகளை வைத்து, நம்மை மற்றவர்கள் தவறாக எடை போட வாய்ப்பிருக்கிறது. YouTube மற்றும் facebook இல் வெளியிடப்படும் கருத்துகளில் பலவும் மூன்றாம் தரமுள்ள மோசமான பதிவுகள். பதிவிடும் போது, அதை உங்கள் உடன் பிறப்போ, கணவன்/மனைவியோ படிக்கும் அளவுக்கு அதில் தரம் இருக்குமாறு பதிவிடுங்கள்.

அடுத்து, நண்பர்களின் நண்பர்கள் friend request அனுப்பும்போது ஒரு முறை யோசியுங்கள். அவர்கள், அதன் பின் உங்கள் நண்பர்களுக்கும் அனுப்புவார்கள். நேரடியாக அறியாதவர்களின் வேண்டுதலை, ஒரு தேவை இருந்தால் ஒழிய ஒப்புக் கொள்ளாதீர்கள். பின்பு தர்மசங்கடத்தை தவிர்க்கலாம். Facebook இல் சிலர், வருடங்களாக நடவடிக்கை ஒன்றும் இல்லாமல் இருப்பார்கள். அவர்களை அவ்வப்போது நீக்கம் செய்யவும், தவறே இல்லை. அலுவலக நண்பர்களை




Facebook இல் இணைப்பது உங்களைப் பற்றித் தேவை இல்லாத எண்ணங்களை ஏற்படுத்தும். அலுவலக நண்பர்களுக்கு Linkedin மட்டுமே என்று தீர்மானியுங்கள்.

Whatsapp ஒரு வியாதியாகவே மாறி விட்டது. நாளின் பெரும்பாலான நேரத்தை அதில் செலவிடுபவர்கள் இருக்கிறார்கள். சில நெறிகளை கடை பிடிக்க வேண்டுகிறேன். பண்டிகைகளின் போது, ஒரு வாழ்த்தை செலக்ட் செய்து, உங்கள் contact அத்தனை பேருக்கும் அனுப்புவதைத் தவிருங்கள். ஒருவருக்கு வாழ்த்து சொல்லும் போது, அவரை உரிமையுடன் பெயர் சொல்லி அழையுங்கள். நூறு பேருக்கு மொட்டைக் கடிதாசி அனுப்புவதை விட, மூன்று பேருக்கு உரிமையுடன் தனிப்பட்ட பதிவு பெயர் சொல்லி அனுப்புங்கள். அதிலுள்ள மகிழ்ச்சி அளவிட முடியாதது. மொட்டைக் கடிதாசி, நீங்கள் மட்டுமல்ல, எல்லோருக்கும் அது போல் பல வரும் என்பதை மறக்காதீர்கள், பத்தோடு பதினொன்று ஆகாதீர்கள்.

# சமூக வலைத்தளங்களில் பாதுகாப்பும் நெறிமுறைகளும்!

Google என்ற ஒன்று உள்ளது, எல்லோருக்கும் தெரியும். அதில் எளிதாக கிடைக்கும் செய்திகளை நீங்களே கண்டு பிடித்தது போல பதிவிடாதீர்கள். அது போல நமக்கு வரும் forward களை எல்லா group கும் forward செய்து சேவை செய்யும் நபர்கள் உண்டு. நான் இருக்கும் whatsapp group ஒன்றில், ஒரு நபர் சமீப கால நிகழ்வு ஒன்று குறித்து, சுமார் 20 message களை forward செய்து group இல் மற்ற நபர்களின் விவாதங்கள் அனைத்தையும் இடையூறு செய்தார். நாகரிகமற்ற meme களை group இல் போடுவதைத் தவிர்க்கவும். அரசியல் மற்றும் மத உணர்வுகளைப் புண்படுத்தும் பதிவுகளை வெளியிடும் போது, உங்கள் மனதைப் புண்படுத்தும் பதிவுகளை நினைத்துப் பாருங்கள்.

அலுவலக நேரத்தில் சமூக வலைத்தளங்களில் நேரத்தை செலவிடுவதை தவிர்க்கவும். உங்கள் வீட்டில் வேலை செய்யும் plumber ஓ, lawn mower ஓ, வேலை செய்யும் போது தொலைபேசியில் இருந்தால், நீங்கள் வேலைக்குப் பணம் கொடுக்கும் முதலாளியின் மனப்பான்மையில் இருந்து என்ன செய்வீர்கள் என்று நினைத்துப் பாருங்கள்.

இறுதியாக, whatsapp இலோ FB இலோ text message இலோ, எந்த முக்கியத் தகவலையும் அனுப்பாதீர்கள். உங்கள் account hack ஆகலாம். யாராவது எதாவது சந்தேகப்படும்படி கேட்டால், நேரடியாகத் தொடர்பு கொண்டு தகவலைச் சரி பார்க்கவும்.

உங்கள் நேரத்தை அளவோடும், தரமோடும் செலவிடுங்கள். நன்றி.

**எழுதியவர்: எஸ். சத்யவாகீஸ்வரன்**

# சமையல் குறிப்பு

## மசால் வடை

15 நிமிடங்கள்; சமையல் நேரம்: 30 நிமிடங்கள்;
ஊற வைக்கும் நேரம்: 120 நிமிடங்கள்
பரிமாறும் அளவு: 30 (ஏறத்தாழ)





**தேவையான பொருட்கள்:**

- 1 கப் கடலை பருப்பு (Chana Dal)
- 1 கப் மஞ்சள் பட்டாணி பருப்பு (Yellow Split Peas)
- 1/8 கப் உளுத்தம் பருப்பு (Urad Dal)
- 4 சிவப்பு மிளகாய்
- 2 பச்சை மிளகாய்
- 1/2 தேக்கரண்டி(tsp) பெருங்காயம்
- 2 தேக்கரண்டி உப்பு
- 1 நடுத்தர அளவு (மிகச்  சிறியதாக) நறுக்கப்பட்ட வெங்காயம்
- சிறிதளவு நறுக்கிய கொத்தமல்லி இலை
- எண்ணெய் - பொரிப்பதற்கு தேவையான அளவு

**செய்முறை :**

- மேலே சொன்ன மூன்று பருப்புகளையும் இரண்டு மணி நேரம் ஊறவைக்கவும்.
- பின்னர் தண்ணீரை நன்றாக வடித்துவிட்டு "உணவு செயலி"யில் (food processor) போட்டு கொஞ்சம் கொரகொரவென்று அரைத்துக் கொள்ளவும். அரைக்கும் போது அதனுடன் சிவப்பு மிளகாய், பச்சை மிளகாய், பெருங்காயம், உப்பு ஆகியவற்றையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.
- அரைத்த மாவுடன்  வெங்காயம், கொத்தமல்லி ஆகியவற்றை கலக்கவும்
- வாணலியில் எண்ணெய் விட்டு, சூடானவுடன் மாவை சிறிய உருண்டையாக உருட்டி அதை தட்டையாக தட்டி சூடான எண்ணெயில் போட்டு பொன்னிறமாக வறுக்கவும் (இடையில் ஓரிரு முறை திருப்பி விடவும்).
- இந்த மசால் வாடையைக் கொத்தமல்லி சட்னியுடன் சாப்பிட்டால்…ஆஹா,  அதன் சுவையை வார்த்தைகளால்  சொல்ல முடியாது.....
- ஆமா, சட்னி எப்படி செய்வது என்று தானே யோசிக்கிறீர்கள் ....இதோ

**எழுதியவர்: மீனா இலக்குவன்**

# கொத்தமல்லி சட்னி

தயாரிப்பு நேரம்: 10 நிமிடங்கள்;  சமையல் நேரம்: 10 நிமிடங்கள்





**தேவையான பொருட்கள்:**

- 2  நடுத்தர அளவு வெங்காயம்
- 2  தக்காளி
- 1 கட்டு கொத்தமல்லி
- 4 சிவப்பு மிளகாய்
- 4 பச்சை மிளகாய்
- 1/4 தேக்கரண்டி(tsp) புளி விழுது
- 1 1/2 தேக்கரண்டி  உப்பு
- 2 மேசைக் கரண்டி எண்ணெய்
- 1/2 தேக்கரண்டி கடுகு
- 1 தேக்கரண்டி உளுந்து

**செய்முறை :**

- வெங்காயம், தக்காளி, கொத்தமல்லி, பச்சை மிளகாய் ஆகியவற்றை துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்
- வாணலியில் எண்ணெயை சூடு செய்து அதில் கடுகு, உளுந்தம் பருப்பை போடவும். கடுகு வெடித்தவுடன் நறுக்கி வைத்துள்ள வெங்காயம் சேர்த்து வதக்கவும். வெங்காயம் சிறிது  வதங்கியவுடன் தக்காளி, பச்சை மிளகாய், சிவப்பு மிளகாய், புளி விழுது, உப்பு ஆகியவற்றை சேர்த்து மேலும் 5 நிமிடங்கள் வதக்கவும். இறுதியாக கொத்தமல்லி சேர்த்து 2 நிமிடங்கள் வதக்கவும்.
- நன்றாக ஆறிய பின் மின் அம்மியில் (mixie) அரைக்கவும்.

**எழுதியவர்: மீனா இலக்குவன்**

# ஜேம்ஸ் நதிக்கரையினிலே... (ஒரு தொடர்)



அனைவரும் எப்போது குளிர் காலம் முடிந்து நிம்மதியாக வெளியே கிளம்பலாம் என்று காத்துக் கொண்டிருப்பீர்கள். உடனே கிளம்பிவிட வேண்டாம். அப்படியே கிளம்பினாலும் முகக் கவசமும் சமூக இடைவெளியையும் மறக்காதீர்கள். மேலும் ஊரெல்லாம் மகரந்தமே! அச்சூ!!

அதற்காகவே இந்த மாதம் அருகில் இருக்கும் இடங்களைப் பார்ப்போம். இயற்கை அழகை ரசிக்க நாம் வெகு தூரம் போகத் தேவையில்லை. நம் ரிச்மண்டிலேயே நிறைய இடங்கள் இருக்கின்றன.



**<u>போனி பேஸ்சர் (Pony Pasture)</u>** இதுதான் ரிச்மண்டின் பீச்சாங்கரை. ஜேம்ஸ் நதியின் தெற்குக் கரையில் ரிச்மண்ட் நகரத்தின் விளிம்பில் இருக்கிறது. நதியின் குறுக்கே நிறையப் பாறைகளுடன் பார்க்க மிகவும் ரம்மியமான இடம். ஒரு அழகான படித்துறையும் இருக்கிறது இங்கே. கோடையில் இந்த இடம் நிரம்பி வழியும். கயாக் செய்ய மிகவும் உகந்த இடம். நீரில் இறங்கி விளையாட ஆரம்பித்தால் குழந்தைகள் எளிதில் கிளம்ப மாட்டார்கள். பாருங்கள் நீங்களே...




நதிக்கரையோரமாக நீண்ட தூரம் நடக்கவும் பாதைகள் இருக்கின்றன. மீன் பிடிப்பதில் ர்வமுள்ளவர்கள் இங்கு கட்டாயம் போக வேண்டும். சமீபத்தில் இங்கே டியூபிங் போன்ற கேளிக்கைகளும் ஆரம்பித்திருப்பதாய் கேள்விப்பட்டேன். இந்த இடத்திற்கு உங்கள் வீட்டிலிருந்து அரைமணி நேரத்தில் போய் விடலாம்.

# ஜேம்ஸ் நதிக்கரையினிலே... (ஒரு தொடர்)



**பெல் தீவு (Belle Isle)** ரிச்மண்ட் நகரின் நடுவே இருக்கும் அழகான தீவு. வாகனங்கள் செல்லும் பாலத்தில் இரும்புக் கயிறுகளால் கட்டித் தொங்கவிடப்பட்ட ஒரு நடைப்பாதையில் நடந்துதான் இந்தத் தீவுக்குப் போக முடியும். இந்தத் தீவுக்கு சைக்கிளில் கூட போய் வரலாம். இந்தத் தீவில் சுற்றிப் பார்க்க பல இடங்கள் இருக்கின்றன. பாறைகளின் ஊடே வேகமாகப் பாயும் நதியைப் பார்க்கலாம். Rapids எனப்படும் வேகமான நதி கயாக் ஆர்வலர்களின் இடையே பிரசித்தம். எப்போது போனாலும் ஓரிரண்டு கயாக்குகளை பார்க்கலாம். இங்கேயும் பாறைகள் அடர்ந்த நதி. நடந்தும் சைக்கிளிலும் சுற்ற ஏகப்பட்ட பாதைகள் இருக்கின்றன.

இந்தத் தீவில் ஒரு நீர்மின் நிலையம் இருந்ததாம். அதன் இடிபாடுகளைக் காணலாம். அமெரிக்க உள்நாட்டுப் போரில் இந்தத் தீவு ஒரு சிறைச்சாலையாக பயன்படுத்தப் பட்டது. இங்கிருந்து ஆரம்பித்து ஜேம்ஸ் நதியை சுற்றி வர ஒரு 10 கிமீ பாதை இருக்கிறது. தென்கரையில் போகும் பட்டர்மில்க் டிரெய்ல் மிகவும் அழகான மலைப்பாதை. இந்தப் பத்து கிமீ பாதையை சைக்கிளிலேயே நிறைய பேர் சுற்றுவார்கள். வேலை நாட்களில் மதிய உணவு இடைவேளையில் இந்தப் பாதையில் சைக்கிளில் என் நண்பர் ஒருவர் சுற்றுவார். நான் ஒரு நண்பருடன் சில ஆண்டுகளுக்கு முன் நடந்த போது பதிந்த வரைபடம். எவ்வளவு நேரமாகியது என்று கேட்காதீர்கள்.




**மேமாண்ட் பூங்கா (Maymont Park)** என்ன இவன் நதியிலேயே முங்கிக் கிடக்கிறானே என்று நீங்கள் அலுத்துக் கொள்வது கேட்கிறது. இதோ நதியை விட்டு சற்றே விலகி உள்ளே போவோம். ஆர்தர் ஆஷ் புலவார்டின் தென்கோடியில் நூறு ஏக்கருக்கு பரந்த மிகப் பெரியப் பூங்கா மேமாண்ட் பூங்கா. இங்கே நுழைந்ததும் பண்ணை விலங்குகள் கொண்ட ஒரு Petting Zoo இருக்கிறது. நிறைய ஆடு, மாடுகள், கோழி, குதிரை, எருமை, மான் போன்றவைகளுக்கு நீங்கள் உங்கள் கையால் தானியங்களைக் கொடுக்கலாம். அருகில் வரும் ஆடு மாடுகளை தடவிக் கொடுக்கலாம்.

# ஜேம்ஸ் நதிக்கரையினிலே... (ஒரு தொடர்)

அப்படியே இறங்கிப் போனால் காட்டுப்பூனை, நரி போன்றவற்றை பார்க்கலாம். பிறகு



பலவிதமான கழுகுகள் கொண்ட ஒரு காட்சியகம் இருக்கிறது. அதற்கும் அடுத்து கரடிகளின் ஒரு இருப்பிடம். பூங்காவின் பின்புறம் இருக்கும் ஜப்பானியத் தோட்டமும், இத்தாலியத் தோட்டமும் கண்டிப்பாக பார்க்க வேண்டியவை.

இந்தப் பூங்காவின் இன்னொரு கோடியில் ஒரு அழகான இயற்கை பொருட்காட்சி (Nature Center) இருக்கிறது. நிறைய மீன் வகைகள், ஆற்றைப் பற்றிய விளக்கங்கள், வர்ஜினியாவின் நதிகளைப் பற்றி கொண்ட கண்காட்சி - இதைப் பார்ப்பதற்கே நீண்ட நேரம் ஆகும். இதைப் பார்ப்பதற்கென்றே தனியாக நீங்கள் போய்வர வேண்டும்.



இந்தப் பூங்காவில் சுற்ற, விளையாட புல்வெளிகளும், மரங்களும், குளங்களும் சோலைகளும் நிறைய உண்டு. அடர்ந்து படர்ந்து விரிந்த மரங்களில் ஏறி விளையாடலாம்.



**போகஹோண்டாஸ் பூங்கா (Pocahontas State Park)**
ரிச்மண்டின் தெற்கே செஸ்டர்ஃபீல்டில் இருக்கும் மிகப் பெரிய பூங்கா போகஹோண்டாஸ் பூங்கா. இங்கு அனைத்து வயதினரும் அனுபவிக்க பலவிதமான கேளிக்கைகள் உண்டு. நிறைய காட்டுப் பாதைகள், குளங்கள் கொண்ட பூங்கா இது. மீன் பிடிக்கலாம். படகு சவாரி செய்யலாம். இங்கே இருக்கும் நீச்சல் குளம் (Aquatic Recreation Center) சிறுவர்களுக்கு மிகவும் பிடித்த ஒன்று.

**எழுதியவர்: நாகு பரசு**

# மூளைக்கு வேலை - புதிர்கள்

**புதிர் [A]: கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் காலியாக உள்ள கட்டங்களை நிரப்பவும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| **10** | | | | |
| | | | | **38** |
| | | | **22** | |

**விதிமுறைகள்:**

1. இந்தக் கட்டங்களில் நீங்கள் எந்த எண்களை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.
2. ஒவ்வொரு எண்ணையும் ஒரு முறை மட்டுமே பயன்படுத்த வேண்டும் .
3. இடமிருந்து வலமாக கூட்டினால் 370 -ம் மேலிருந்து கீழாக கூட்டினால் 222 -ம் கூட்டுத்தொகையாக வர வேண்டும்.

**புதிர் [B]: கீழ்கண்ட வரிசையில் அடுத்து வரவேண்டிய எண் எது? ஏன்?**

1 + 4 = **5**
2 + 5 = **12**
3 + 6 = **21**
8 + 11 = **?**

**(விடைகள் - கடைசிப் பக்கம்)**

**புதிர் ஆக்கம்: சந்துரு**

# கவிதைக் குவியல்

## தலைமுறை

சனிக்கிழமை காலையில் எண்ணெய் தேய்க்க வரும் அம்மாவிடம் இருந்து தப்பி ஓடுவேன்

என் பம்பரத்தை எடுத்து கொண்டு........

குமார் அண்ணன் வந்த உடனேயே சில்லாக்கு ஆரம்பமாகும்....

நிழலுக்கும் வேர்க்கும் கோடை வெயிலில் தான் எங்கள் கில்லி தாண்டு

உச்சமெடுக்கும்...........

பச்சை குதிரை தாண்டியே பாதி காயம் பட்டிருக்கும்........

பல்லாங்குழி ஆட பாசமாக என் அக்காள் காத்திருக்கும்.....

உள்ளங்கை வேர்த்துவிடும் கம்பு தள்ளி......

கை முட்டி தேய்ந்தது சொட்டாங்கல்லில்.....

இருட்டும் பொழுது ஒளிய தொடங்குவோம் ஒருவனை கண்டு பிடிக்க சொல்லி......

இரவின் முன்னே விளையாடுவோம் ராஜா ராணி........

வெள்ளி கிழமை மட்டுமே வரும் கோயில் யானை.....

புகை கக்கி பின்னாலே இழுத்து செல்லும் கொசு வண்டி....

மின்சாரம் தடைபட்டால் எங்கள் தெரு மெழுகின் சொர்க்கம்...

இமை மூடாமல் தானாகவே தூக்கம் சொக்கும்.....

இத்தனையும் தோன்றும் கதை போல் என் மகனுக்கு.....

கதையாவது கேட்க பிடிக்குமோ அவன் பிள்ளைக்கு.......

**எழுதியவர்: அருண்குமார்**

## அறியாத அற்புதங்கள்

சூரியன் உதிப்பது சந்திரனுக்குத் தெரியாது
காலையின் வெளிச்சம் இரவுக்குத் தெரியாது
கடலின் ஆழம் கரைக்குத் தெரியாது

மௌனத்தின் சக்தி பேச்சுக்குத் தெரியாது
முதுமையின் ஆளுமை இளமைக்குத் தெரியாது
புன்னகையின் அழகு அழுகைக்குத் தெரியாது

வெற்றியின் ரகசியம் தோல்விக்குத் தெரியாது
மழையின் குளிர்ச்சி வெயிலுக்குத் தெரியாது
நிதானத்தின் பலன் வேகத்திற்குத் தெரியாது

நண்பனின் அருமை எதிரிக்குத் தெரியாது
சமாதானத்தின் தத்துவம் சண்டைக்குத் தெரியாது
ஆரோக்கியத்தின் வலிமை நோய்க்குத் தெரியாது
புத்திசாலியின் ஆற்றல் முட்டாளுக்குத் தெரியாது
உண்மையின் பெருமை பொய்க்குத் தெரியாது
நிகழ்காலத்தின் நிதர்சனம் கடந்தகாலத்துக்குத் தெரியாது

பாதுகாப்பின் நிம்மதி ஆபத்துக்குத் தெரியாது
முதன்மையின் பொறுப்பு கடைசிக்குத் தெரியாது
இனிப்பின் சுவை கசப்புக்குத் தெரியாது

வலது கண்ணின் அழுகை இடது கண்ணுக்குத் தெரியாது
தீமையின் நஞ்சு நன்மைக்குத் தெரியாது
பயத்தின் அச்சம் தைரியத்துக்கு தெரியாது

வெப்பத்தின் தேவை குளிருக்குத் தெரியாது
பண்டையத்தின் உணர்வு நவீனத்துக்குத் தெரியாது
ஏழ்மையின் நேர்மை செல்வத்துக்குத் தெரியாது
தொடக்கத்தின் முயற்சி முடிவுரைக்குத் தெரியாது
கருப்பின் சூழ்ச்சி வெள்ளைக்குத் தெரியாது
சுத்தத்தின் பயன் அழுக்குக்குத் தெரியாது

இறைவனின் உத்வேகம் பக்தனுக்குத் தெரியாது
ஆனால், தாய்மையின் உணர்வை அனைத்து உயிரினங்களும் அறிந்தது
-

**எழுதியவர்: ஹர்ஷினி ஸ்ரீனிவாசன்**

# வணிக ஆதரவாளர்களுக்கு நன்றி!



# திரைப்பட விமர்சனம் - Pagglait (ஹிந்தி)



சந்த்யா (சான்யா மல்ஹோத்ரா) திருமணமான ஐந்தே மாதத்தில் கணவனை இழப்பதில் இருந்து துவங்குகிறது படம். பெற்றோர்கள் பார்த்து நடத்தி வைத்த திருமணம். கணவனின் இழப்பை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாத ஆங்கில முதுகலை பட்டதாரிப் பெண்.
சற்றே கட்டுப்பெட்டியான, மாமனார், மாமியார், மைத்துனன் உள்ளிட்ட குடும்பம். கணவன் இறந்த அடுத்த 13 துக்க நாட்களில் என்ன நடக்கிறது என்பதுதான் கதை.
சாவு வீடாகினும், அதீத துக்க வெளிப்பாடுகளோ, நாடகத்தன்மையோ இல்லாத காட்சியமைப்புகள். தொடர்பு இல்லாவிடினும் எஸ்.ராமகிருஷ்ணனின் 'உறுபசி' குறுநாவல் லேசாக நினைவுக்கு வந்தது. அதில், நண்பனின் சாவிற்கு வந்த மற்ற நண்பர்களின் நினைவோட்டங்களுடன் கதை பயணிக்கும். இந்தப் படத்தில் கணவன் எப்படி இறந்தான் என்று கூட ஃபிளாஷ்பேக் காட்சி கிடையாது. ஏன் மாலை போட்ட அவன் புகைப்படம் கூட காண்பிக்கப்படுவதில்லை.

சந்த்யா இது வேறு யார் வீட்டிலோ நடந்த மாதிரி இருக்கிறாள். அவளுக்கு வெளியே போய் பானிபூரி சாப்பிட வேண்டும் போல் இருக்கிறது. ஃபேஸ்புக்கில் விஷயம் கேள்விப்பட்டு ஆறுதல் கூற வந்த தோழியிடம் 'ஆம், 235 கமென்ட்ஸ் வந்திருக்கிறது' என்கிறாள். ஆனால் அடுத்து வரும் 13 நாட்களில் சரியாகப் பழகியிராத கணவனின் மறுபக்கம், காப்பீட்டுத் தொகை, மாமனாரின் கடன் தொல்லை என்று படம் சுவாரஸ்யமாகச் செல்கிறது.

படம் சொல்ல வந்ததை முகத்தில் அறைவது போல் இல்லாமல் பூடகமாகச் சொல்கிறது. தோழி முஸ்லீம் என்று தெரிந்தவுடன் கணவன் வீட்டார் கொள்ளும் விலக்கம், தோழி 'நான் வெஜிடேரியன்' என்றதும் அதற்குப் பக்கத்து வீட்டுப் பையன் 'நீயோ முஸ்லீம், எப்படி?' என்று ஆச்சரியப்பட, அதற்கு அவள் 'எல்லா சச்சினும் டெண்டுல்கர் அல்ல' என்று பதிலளிப்பது, சந்த்யா மைத்துனனுக்கு ஆங்கிலத்தில் இரங்கல் செய்தி எழுதச் சொல்லிக் கொடுப்பது என்று பல அருமையான காட்சிகள். வீட்டிற்கு கொஞ்சம் கொஞ்சமாக வந்து சேரும் பிற உறவினர்கள் கதைக்குப் பரிமாணத்தைக் கூட்டுகிறார்கள்.
ஆனால் துக்க நாட்கள் முடிவதற்கு முன்பே சந்த்யாவின் மறுமணத்தைப் பற்றிப் பேசுவது லேசான நெருடல்.

மாமனார் ஷிவேந்த்ர கிரி (அஷுதோஷ் ராணா). மலை போல் நம்பியிருந்த மகனின் இழப்பு தந்த துக்கம் ஒருபுறம், காப்பீட்டுத் தொகை மோசடிக்கு நிர்ப்பந்திக்கும் சகோதரர்களுக்கு உடந்தையாக மறுப்பு என்று நன்றாக நடித்துள்ளார். அதே போல் முன்னாள் காதலி அகாங்ஷா (சயானி குப்தா) - இவர் Mirzapur தொடரில் கவனம் ஈர்த்தவர்.

அனைவரையும் தூக்கிச் சாப்பிடுவது கதாநாயகி சான்யா மல்ஹோத்ரா. பல்வேறு உணர்ச்சிகளைத் துல்லியமாக பார்வையாளர்களுக்குக் கடத்துகிறார். டங்கலில் ஆமிர் கானின் பெண்ணாக நடித்தவர். அகாங்ஷாவிடம் ஆங்காரத்துடன் பேசி விட்டு வேகமாக வீட்டிற்கு வந்து கணவனின் சட்டையைப் போட்டுப் பார்க்கும் காட்சியில் அருமை. மொத்தத்தில் அனைவரது நடிப்பும் நிறைவு.

# திரைப்பட விமர்சனம் - Pagglait (ஹிந்தி)

படத்தில் வரும் அனைவரும் ஒரு விதத்தில் சுயநலம் மிக்கவர்களே, சந்த்யா உட்பட. அதைப் படம் மென்மையாகக் கூறிச் செல்கிறது.
இந்த மாதிரியான ஆர்ப்பாட்டம் இல்லாத படங்கள் multiplex வருகைக்குப் பின் ஹிந்தியில் சாத்தியமாகியது. இப்போது OTT பரவலாகியிருக்கிறபடியால், வசூல் நிர்ப்பந்தமின்றி தமிழிலும் சாத்தியப்படலாம்.
மசாலாப் படங்கள் பார்த்து சலித்தவர்கள் நிச்சயமாகப் பார்க்க வேண்டிய படம். Netflixல் இருக்கிறது.

**எழுதியவர்: ரவி திருவேங்கடத்தான்**

# திரைப்பட விமர்சனம் - The Great Indian Kitchen



நேற்று The Great Indian Kitchen திரைப்படத்தைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. விமர்சனம் எழுதக் கை துறுதுறுவென்று வந்தது. சுருக்கமாக எழுதுகிறேன், கடைசிக் காட்சியின் சஸ்பென்சை உடைக்கப் போவதில்லை.

கதை சாராம்சம்: ஒரு படித்த பெண், பழைய ஆச்சாரங்கள் கொண்ட ஒரு குடும்பத்தில் திருமணம் செய்து வைக்கப் படுகிறாள். ஒவ்வொரு நிமிடமும் அவள் சமையலறையில் அல்லாடுவது படத்தின் முக்கியக் கரு. வித விதமான உணவு வகைகளைச் சமைப்பது மட்டுமல்ல, பாத்திரங்களை நாள் முழுவதும் கழுவுவது, அளவு கடந்த வீட்டு வேலைகள் செய்யும் பரிதாபத்திற்குரிய மருமகள் மற்றும், கொஞ்சம் கூட இரக்கம் இல்லாமல் உணவுக் கழிவுகளை விட்டு விட்டுக் கை கழுவிச் செல்லும் குடும்பத் தலைவர்களை இந்தப் படம் வெளிச்சமிட்டுக் காட்டியிருக்கிறது.

மென்மையான குணாதிசயம் உள்ளவராகக் காட்டியிருக்கும் மாமனார்தான் அதிகப் பட்சமான அட்டூழியங்களைச் செய்கிறார். குக்கர், மிக்ஸி, வாஷிங் மெசின் ஆகியவற்றைத் தன் சாமர்த்தியமான பேச்சில் ஒதுக்கி வைத்துக் கருணையே இல்லாமல் மருமகள் தலையில் வேலைகளைக் குவிக்கிறார். ஓட்டலில் உணவுக்கழிவுகளை நாகரீகமாக ஒதுக்கி வைக்கும் கணவன், வீட்டில் அதைச் செயல்படுத்த மறுக்கும்போது, அதைக் கேட்கும் மனைவியிடம், அப்படித்தான் இருப்பேன், நீ என்ன கேட்பது என்று கொக்கரிக்கிறார். கணவரும் மாமனாரும் மருமகள் வேலைக்குப் போவதைச் சாதுர்யமாகத் தடுக்கிறார்கள்.

அதே கண்ணியவான்கள், மருமகள் மாத விடாயில் இருக்கும் போது, அவளை ஒதுக்கி வைத்து வேலைக்காரி சாப்பாட்டில் கூச்சமில்லாமல் உண்கிறார்கள். (Hypocrites - கபடதாரிகள்? மற்ற நாட்களில் மருமகள்தான் வேலைக்காரி, என்ன அக்கிரமம்). அப்போது அங்கு இருக்கும் மாமனாரின் சகோதரி, அவளின் படுக்கையைப் பிடுங்கி தரையில் படுக்கச் சொல்லி, குடும்பப் பெண்களின் சீரழிந்த வாழ்க்கைக்கு, ஆண்கள் மட்டும் காரணமல்ல என்று உணர்த்தி, படம் பார்க்கும் ஆண்களின் வயிற்றில் பால் வார்க்கிறார்.

உள்ளுக்குள் குமுறிக் கொண்டு இருக்கும் நாயகிக்கு, பொங்கி எழும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. கணவன் மற்றும் மாமனார் சபரி மலைக்கு போக மாலை இடுகிறார்கள். பல கட்டுப்பாடுகளை வைத்து மேலும் கொடுமைகள் அதிகமாகின்றன. வண்டியில் இருந்து கீழே விழுந்த நாயகனைக் கை பிடித்துத் தூக்கி விடும் நாயகியை, அவன் ஆவேசமாகத் தள்ளி விட்டு விட்டு, தீட்டுக்குப் பரிகாரம் தேடுகிறான். கடைசியில், நாயகி கொதித்தெழுந்து நீதி நாடுகிறாள்.

நாயகி அளவுக்கு தீர்மானங்களை எடுக்கும் தைரியமோ, சுதந்திரமோ,  சூழ்நிலைகளோ 99.99 சதவீதம் பெண்களுக்கு உண்டாகப் போவதில்லை. ஆனால் படத்தைப் பார்க்கும் நமக்கு, நம்மை சரிப்படுத்திக் கொள்ளும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்தக் காலத்தில் நினைவிருக்கிறது. பொறுப்பற்ற உறவினர்கள் வீட்டுக்கு வந்து பல நாட்கள் தங்கி இருந்து உண்டு விட்டுப் போவார்கள். வேலை முழுவதும் அன்னையர்க்கும், சகோதரியர்க்கும். அதற்கு நன்றியோ பலனோ கிடையாது. விருந்தோம்பல் என்ற போர்வையில், நம் குடும்பப் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளுக்கு கணக்கே கிடையாது. இதில் மாமனார், மாமியார், நாத்தனார் கொடுமைகள் தனி. இது எதுவுமே நடப்பது அறியாமல் இருக்கும் பொறுப்பற்ற கணவர்கள் பாதி, தெரிந்தும் ஒன்றும் செய்ய முடியாத பெரும்பான்மையான கையாலாகாத கும்பல், பிறகு இப்படித்தான் இருப்போம் என்று ஆணாதிக்கம் பிடித்த கயவர் கூட்டம். பெண்களும் மருமகள் ஸ்தானத்திலிருந்து நாத்தனாராகவோ, மாமியாராகவோ மாறும் போது, யாம் பெற்ற கொடுமைகள் மற்ற மருமகள்கள் பெறட்டும் என்ற ஒரு கீழ்த்தரமான எண்ணம்.

இவர்கள் பெரும்பாலும் மாறப் போவதில்லை. அடுத்த முறை உங்கள் தட்டுக்களைக் கழுவாமல் மேசையில் இடும்போதோ, வேலை முடிந்து ஓய்வெடுக்கும் மனைவியிடமோ, தாயாரிடமோ, நாத்தனாரிடமோ, மருமகளிடமோ தேனீர் கேட்கும் போது, தயவு செய்து ஒருமுறை யோசியுங்கள். மாற்றம் நம்மிடமிருந்து தொடங்கட்டும்.


**எழுதியவர்: எஸ். சத்யவாகீஸ்வரன்**

# தமிழ்ப்பள்ளி மாணவர்கள்

தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள்


நிலை - 2

ஆசிரியை - சிவகாமி அண்ணாமலை











# தமிழ்ப்பள்ளி மாணவர்கள்

தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள்

நிலை - 2


ஆசிரியை - சிவகாமி அண்ணாமலை










# பார்வை (சிறுகதை)

“எவ்வளவு காலம் இப்படித்  தனிமரமாய் இருக்கப் போகிறாய். குணவதி, அவள் போய் சேர்ந்து 4  வருஷத்திற்கு மேல் ஆயாச்சு. உன் பெண்ணை நினைத்துப் பார். அவளுக்காகவாவது ஒரு திருமணம் செய்து கொள். அந்தக் குழந்தைக்கு ஒரு தாய் வேண்டாமா? “ - அப்பாவின் புலம்பல் எப்பொழுதும் போல் அன்றைக்கும் ஆரம்பித்தது. இன்னொரு திருமணம் - நினைத்துப் பார்க்கவே கசந்தது.
பானுமதி - அழகு, அன்பு, கருணை, எல்லா விதத்திலும் இறைவன் எனக்கு அளித்த வரம் . நான் அவளை இழந்து வருஷங்கள் பல ஆகிவிட்டது . ஆனாலும், நான் வாழ்ந்த வாழ்க்கையின் நினைப்பு போதும் எனக்கு. என் குழந்தை செல்வி, அவள் அம்மாவின் பிம்பம். அழகு, கனிவு இவற்றின் உருவம். அவள் அன்பும், என் மனைவியின் நினைவும் எனக்குப் போதும்.
ஒரு ஞாயிறு, உறவினர் வீட்டிற்கு செல்லலாம்னு அப்பா வருந்திக்  கூப்பிட்டார். செல்வியும் டிரஸ் பண்ணிண்டு சந்தோஷமாய் புறப்பட்டாள். தட்ட மனமில்லாமல் அரை மனதாகக் கிளம்பினேன். போன இடத்தில் மாவிலைத் தோரணம், ‘வாங்கோ, வாங்கோ” என்ற உபசாரம், தெரியாத மனிதர்கள் , விருந்து உபசாரம். “பெண்ணைக் கூப்பிடுங்கோ “ என்று ஒருவர் சொல்ல, அப்புறம் தான் தெரிந்தது எனக்குப் பெண் பார்க்க வந்திருக்கோம்னு. அப்பா மேல ஒரே கோபம். மற்றவர்களுக்கு எதிரில் வெளியில் காண்பிக்க முடியலை. ஆனால் முகத்தை நிமிர்த்தவில்லை நான். மனது குமுறியது. என் பானுமதி இருந்த இடத்தில் இன்னொருத்தியா? எல்லோரும் கல கல ன்னு பேசற சத்தம், செல்வி சந்தோஷமாய் சிரிக்கும் சத்தம் எல்லாம் கேட்டது. ‘மாப்பிள்ளைக்கு பிடிச்சிருக்கா’ என்று ஒருவர் விசாரிக்கிறார். அப்பா ‘அவனுக்கு பிடிச்சிருக்கு, எங்க எல்லோருக்கும் பரம சந்தோஷம்” னு சொல்லிட்டு கிளம்பினார்.
வீட்டிற்கு வந்து கத்தினேன். என் சம்மதமில்லாமல் எப்படி இதற்கு ஏற்பாடு செய்யலாம்னு. அப்பா ஒரே வார்த்தையில் முடித்தார், “ரொம்ப நல்ல பெண், இப்பொழுது நாம் பார்த்து விட்டு வந்த அமுதா. உனக்கு பிடிச்சிருக்கு, பிடிக்கலை, அதெல்லாம் எனக்கு தெரியாது. செல்விக்கு ஒரு நல்ல அம்மா கிடைத்து விட்டாள். எனக்கு அது தான் முக்கியம். இன்னும் 4 நாளில் கோவிலில் வைத்து திருமணம்”.
எந்த உபாயமும் தெரியாமல் கோவிலில் வைத்து தாலியைக் கட்டினேன். தாலி கட்டும் போது தான் பார்த்தேன் அந்தப் பெண்ணை, ஒரே அதிர்ச்சி. அவள் முதுகு கூன் போட்டிருந்தது. என் மனைவி ஒரு கூனி. என்னால் அவளைப் பார்க்க முடியவில்லை. இரவில் அலங்கரிக்கப் பட்ட அறை, வெறுப்பாய் இருந்தது. “உனக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. நீ யாரோ நான் யாரோ” - வார்த்தையை அனலாய் கொட்டி விட்டு திரும்பிப் படுத்தேன்.
நாட்கள் கடந்தன. இரண்டு மாதங்கள் ஆயிற்று . அவளை முகமெடுத்து பார்க்கவில்லை, இரண்டு வார்த்தை பேசவில்லை. ஆனால் வீட்டில் மாறுதல்கள் தெரிய ஆரம்பித்தது. கோலமிட்ட வாசல், தூய்மையான வீடு, சுவையான உணவு, அமைதியான அப்பா. எல்லாவற்றிற்கும் மேல், எதையோ பறிகொடுத்தது போல் இருக்கும் செல்வி இப்போது கலகல என சிரித்து வளைய வந்தாள். எப்போது பார்த்தாலும் ‘அம்மா, அம்மா’ னு செல்வி அவள்/அந்த கூனியின் பின்னாலே சுற்றுவது எனக்கு பொறுக்கவில்லை, புரியவும் இல்லை.

ஒரு நாள் சாயங்காலம், நானும் செல்வியும் மாத்திரம் வீட்டில். செல்வி பின்புறத்தில் தானே விளையாடிக் கொண்டிருந்தாள். இதுதான் சந்தர்ப்பம் என்று அவளுடன் பேச்சுக் கொடுத்தேன்.

# பார்வை (சிறுகதை)

“செல்வி, என்னடா விளையாடுகிறாய் ?”

“அம்மா கத்துக் குடுத்தாப்பா. பாண்டி மாதிரி இன்னொரு விளையாட்டு”. நீளமாய் அந்த விளையாட்டைப் பற்றி விவரித்தாள் குழந்தை. பொறுக்க முடியாமல் அவளைப் பாதியில் நிறுத்தி படபட வென வெடித்தேன்.

“அது என்ன அம்மா அம்மா என்கிறாய் ? உன் அம்மாவா இவள்? எப்படி உன்னால் அவள் கூனைப் பொருட்படுத்தாமல் இருக்க முடியறது? எப்படி உன்னால் அவளை அம்மாவாய் ஏற்றுக்கொள்ள முடிகிறது?

என் குழந்தை என்னை ஒரு பார்வை பார்த்தாள். அந்த பார்வையை விவரிக்க வார்த்தைகள் இல்லை என்னிடம்.

“கூனைப் பார்த்தால்தான் கூன் தெரியும். அம்மாவைப் பார்த்தால் அம்மா தானேப்பா தெரியும்? நான் என் அம்மாவைத்தானே பார்க்கிறேன்”.

(பின் குறிப்பு: இது 30 வருடங்கள் முன்பு சென்னை தூர்தர்ஷன் தொலைக்காட்சியில் நாடகமாக ஒளிபரப்பப்பட்டது. எழுதியவர் மற்றும் இயக்குனர் நினைவில் இல்லை. ஆனால் அந்தக் கதை, அதன் பாடம் நெஞ்சில் அழியாமல் பதிந்தது. அதை வார்த்தையில் கொண்டு வரும் ஒரு சிறு முயற்சி, இந்தக் கதை.

**எழுதியவர்: சரஸ்வதி**

# வாழ்க்கை வாழ்வதற்கே(சிறுகதை)

“அப்பா அப்பா, உன்ன ஒண்ணு கேக்கட்டுமா?” அழைத்துக் கொண்டே வந்தாள், என் அன்பு மகள் தேன்மொழி.

“என்ன மொழி வேணும்?” நான் வினவினேன்.

அவள் “தமிழ் மொழி” என்று கடித்தாள். அதற்கு நானும் “தேனு, கொட்டாதே” என்றேன்.

தேன்: அப்பா நீ எப்படிப்பா எப்பவுமே ரொம்ப சம நிலையா இருக்க? இன்பம் துன்பம் இரண்டையுமே ஒரே நிலையா, நிதானமா பாவிக்கிற? யாரு எது கேட்டாலும் கொடுத்திடறே. சனி ஞாயிறு சிவானந்தா அனாதை ஆசிரமத்திற்கு கிளம்பிடறே. எங்களையும் நல்லா வளக்கற.  உன் முகத்துல எப்பவுமே ஒரு புன்சிரிப்பு.  எப்படிப்பா? அந்த ரகசியத்த எங்களுக்கும் சொல்லிக் கொடேன்.

நான்: தேனு, அத சொல்லனும்னா உன் பாட்டியைப் பத்தி பெரிய கதை சொல்லணும். நீ தயாரா?

தேன்மொழி கண்களில் கிண்டலுடன்: நீ என்னக்கி சின்ன கதை சொல்லி இருக்கே? அன்னக்கி ஒருத்தர் பக்கத்து தெருவுக்கு வழி கேட்டார். நீ சென்னை ஆட்டோ ஓட்டுபவர் போல, வள்ளுவர் கோட்டம், விவேகானந்தர் இல்லம்னு ஆரம்பிச்சு, காந்தி மண்டபம் வரை எல்லாத்துக்கும் வழி சொல்ற. அந்த மனிதர், நீ எப்ப நிறுத்துவன்னு ஒரு மணி நேரம் காத்திருந்தார். தாங்க முடியாம, சினிமால வர மாதிரி “எஸ்கேப்” ஆயிட்டார்.

நான்: தேனு, இனிப்பா பேசற மாதிரி கொழுப்பா பேசாதே.

கதை வேண்டுமா வேண்டாமா என்று கேட்டு, எங்கே அவள் வேண்டாம் என்று சொல்வதற்குள் என் வாழ்க்கைக் கதையை சொல்ல ஆரம்பித்தேன்.

எனக்கு எட்டு வயதிருக்கும். எங்க பள்ளியில் ஆன்னா ஊன்னா பரீட்சை வைப்பாங்க. அப்படி ஒரு பரிட்சையில் நான் பாஸ் ஆகலை.

தேன்மொழி (குறுக்கிட்டு): ஃபெயிலாய்ட்ட ன்னு சொல்லு.

நான்: அந்த வார்த்தைக்கு எனக்கு அர்த்தம் தெரியாது.

தேன்மொழி: தெரிந்தா பாஸ் பண்ணியிருப்பே இல்ல?

நான்: மறுபடியும் கொழுப்பா?

தேன்மொழி: (சிரித்து கொண்டே) உங்க பொண்ணு தானே? சரி, கதை சொல்லுங்க.

நான்: சரி சரி. அந்த மார்க் ஷீட்டை என் அம்மாவிடம் தயக்கமாக கொடுத்தேன். அடியா திட்டா என்று பயத்துடன் கால் நடுங்க காத்திருந்தேன்.

அப்போது அம்மா “சிவாஜி படம் போலாமா?” என்றார்கள்.

அடி, திட்டிலிருந்து எஸ்கேப் ஆன நான் சரி என்றேன். படம் பார்த்த பின்னர் திரும்புகையில் அம்மாவிடம் கேட்டேன். “சிவாஜி படம்னா திருவிளையாடல் படத்திற்கு போவோம்னு நினைத்தால் நீ பாலும் பழமும் படத்திற்கு கூட்டிட்டு வந்துட்டயேம்மா. இப்படி ஒரு பனிஷ்மெண்ட்டா? இதுக்கு நீ என்ன அடிச்சோ, திட்டியோ இருந்திருக்கலாம்.”

அம்மா சிரித்துக் கொண்டே: “போனால் போகட்டும் போடா”. அத நீ புரிஞ்சுக்க தான் இப்படி செய்தேன். நீ பயத்துடன் மார்க் ஷீட் கொடுக்கும்போதே இனிமே நீ எப்பவுமே நல்லா படிப்பேன்னு எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது. வாழ்க்கைய  நல்லா அனுபவிச்சு வாழணும்டா. அதனால தான் ஜாலியா படம் பார்க்கலாம்னு உன்னையும் கூட்டிட்டு வந்தேன். ஒரு அருமையான படத்தை இப்படி பனிஷ்மெண்ட்னு சொல்லாதே.

நாம ஏழை தான். அப்பா ஒரே தண்ணிதான். ஆனாலும் எனக்கு ரெண்டு கண்களா உங்க அண்ணனும் நீயும் இருக்கும் போது, எனக்கு என்ன கஷ்டம்? வாழ்க்கைக்கு முக்கியம் பணம் இல்லை, நல்ல குணம். கஷ்டமோ நஷ்டமோ, சமநிலை.”

நான்: அம்மா, நீ சிவாஜிக்கு மேல நல்ல டயலாக் பேசற. நம்ப டயலாக் கேள். தெரிந்தது, தெரியாதது, அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது , இவை அனைத்தையும் உன்னிடம் தான் யாம் கற்றோம்.

அம்மா (கொஞ்சம் நெற்றி கண்ணை திறந்து): வீட்டுக்கு வா, அடியா திட்டானு தெரியும் என்று சொல்லி பின்னர் சிரித்து விட்டார்கள்.

அன்றிலிருந்து நான் நன்றாக படிக்க ஆரம்பித்தேன். அண்ணனையும் என்னையும் கல்லூரி படிப்பிற்காக தன் தாலி முதல் அனைத்து சொத்தையும் அடகு வைத்தார்கள் என் அம்மா. ஒரே ஒரு வேளை தான் சாப்பிடுவார்கள். ஆனாலும், அவர்கள் முகத்தில் எப்போதும் ஒரு புன் சிரிப்பு. அண்ணனும் நானும் இன்று கோடீஸ்வரர்கள் ஆவதற்கு அந்த பத்தினி தான் முழு காரணம்.

நாங்கள் செல்வந்தர்கள் ஆனாலும் அம்மா மாறவே இல்லை. அடகு வைத்த எல்லா நகையும் மீட்டு அம்மாவிடம் கொடுத்தோம். தாலியை தவிர பாக்கி நகைகளை நன்கொடையாக கொடுத்து விட்டார்கள். எல்லோரும் இன்புற்றிருக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார்கள்.

அம்மாவிடம் நான் கேட்டேன்: “வாழ்க்கையை நல்லா ரசிச்சு வாழணும்னு சொல்லிட்டு நீங்க எல்லாத்தையும் தானம் செய்யறீங்களே, ஏன்?”

அம்மா: “பிறருக்கு உதவறதுல கிடைக்கிற சுகம் வேறு எதுலயுமே இல்லடா. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”

# வாழ்க்கை வாழ்வதற்கே(சிறுகதை)

“அடேயப்பா, முடியலமா. சினிமால நடிக்க வேண்டியவங்க நீங்க. உங்க வழியே தனி வழி தான்.” என்று நான் சொன்னதும் சிரித்து விட்டார்கள்.

கடந்த காலத்தில் சரியாக சாப்பிடாததால் அம்மாவிற்கு உடல் நலம் குன்றியது. அப்போலோ ஆஸ்பத்திரிக்கு விரைந்தோம். டாக்டர்கள் பல பரிசோதனைகள் செய்து எங்களுக்கு வேதனையாய் ஒரு செய்தி சொன்னார்கள். அம்மாவிற்கு சிறுநீரகம் (கிட்னி) வேலை செய்யவில்லை என்றார்கள். அண்ணனுக்கு இரத்த அழுத்தம் அதிகமாக இருந்தால் அவர் தன் சீறுநீரகத்தைக் கொடுக்க முடியவில்லை. என்னை பரிசோதனை செய்தார்கள். அப்போது தான் ஒரு பெரிய வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார்கள். நீ இவர்களின் பிள்ளையே இல்லை என்று. அப்போது தான்  என் சித்தி சொன்னார்கள், சிவானந்த அனாதை ஆசிரமத்தில் இருந்து என்னை தத்து எடுத்தார்கள் என்று.
பிச்சை எடுப்பவர்களுக்கு 10 ரூபாய் போட்டு புளகாங்கிதம் ஆகிற மனிதர்களுக்கு இடையில் தெய்வம் போல் இப்படி ஒரு தாயா எனக்கு. கண்ணீர் ஆறாக ஓடியது.

என் அம்மாவின் உடல் நலம் மிகவும் மோசம் ஆகியது. அப்போதும் அவர்கள் முகத்தில் புன்சிரிப்பு. அவர்கள் உயிர் போகும் முன் சொன்ன கடைசி வார்த்தைகள் “**வாழ்க்கை வாழ்வதற்கே**”

தேனு, நம்ம வீட்டிலே சாமி அறையில அம்மாவோட படம் மட்டும் தான் இருக்குனு உனக்குத் தெரியும். ஏன் என்றால், “என் தாயினும் சிறந்த கோவிலும் இல்லை, என் அம்மா தான் எனக்கு கண்கண்ட தெய்வம்”. மே 9 அம்மா தினம்னு இந்த வருடம் கொண்டாடறாங்க, ஆனா எனக்கு எல்லா நாளுமே அம்மா தினம் தான்.
தேன்மொழி கண்களில் கண்ணீர் கங்கையாக ஓடியது. அப்போது அவள் என்னை கேட்டாள், “ஒரு கேள்வி கேக்கறேன். அப்பா, நான் உனக்கும் அம்மாவிற்கும் பிறந்த பெண்ணா இல்ல தத்து எடுத்த பெண்ணா?”
**பின்குறிப்பு**: இது ஒரு கற்பனை கதை. என்னைப் பத்து மாதம் மடியில சுமந்து, வளர்த்து, ஆளாக்கிய என் தாய்க்கும், அனைத்து தாய்மார்களுக்கும் இந்தக் கதையை சமர்ப்பணம் செய்கிறேன்.

**எழுதியவர்: இராமபாலா**

# ஹிட்லர் (சிறுகதை)

"இந்த மாதிரி பாதி முதுகு தெரியற மாதிரி ரவிக்கை போட்டுண்டியானா, கிழிச்சு போட்டுடுவேன்", ரௌத்திரமாய் கத்தின அப்பாவை நினைத்தால் ஆத்திரம் கொப்பளிக்கறது. அதிகாரம், அடக்குமுறை, ஆதிக்க மனப்பான்மை - இது எல்லாம் சேர்ந்தது தான் என் அப்பா. நினைவு தெரிந்த நாள் முதல் இந்த அப்பாவை தான் ஞாபகம் இருக்கு.

"சாயங்காலம் 6 மணிக்குள் வீட்டில் இருக்கணும்", "ஆறிலிருந்து எட்டு மணி வரைக்கும் படிப்பு, அப்புறம் சாப்பாடு. 9 மணிக்கு எல்லாம் தூங்க போய்டணும்.", எல்லா விஷயத்திலும் கட்டுப்பாடு, அடக்குமுறை. வெறுப்பாய் இருந்தது. சரியான ஹிட்லர் வந்து வாய்ச்சார் என அப்பாவாய்.

"இந்த ஹீரோ ஹாண்ட்சம் ஆ இருக்கான், ஷம்மி கபூர் டான்ஸ் சூப்பர்" - ஒரு சாதாரண கமெண்ட் கூட நானும் என் தங்கையும் அடிக்க பயப்படுவோம். ஏன்னா, எங்கப்பாவுக்கு பிடிக்காது.

பருவ வயதில் வருகிற கேள்விகள், குழப்பங்கள் எதற்கும் அம்மாவைக்கூட அணுக முடியாது. ஏன்னா, அம்மா ஒரு வாயில்லாப் பூச்சி. அப்பாவை மீறி ஒன்னும் பேச மாட்டாள். நன்னா ஞாபகம் இருக்கு, எனக்கு 18 வயசு இருக்கும், என் க்ளோஸ் ஃப்ரெண்டு பாப்-கட் பண்ணிண்டா, அவ தலையை. அவ்ளோ அழகா இருந்தது, டால் மாதிரி. அவ வேற, என்னை "உனக்கு இன்னும் நன்னா இருக்கும் இந்த ஹேர் ஸ்டைல், இந்திரா காந்தி மாதிரி". ஒரே ஆசையா இருந்தது . அம்மா கிட்ட வந்து "அம்மா, ப்ளீஸ் ப்ளீஸ், நான் ஹேர் கட் பண்ணிக்கிறேன். என் பிரெண்ட் பண்ணிண்டிருக்கா, எனக்கு ஆசையா இருக்கும்மா".. எங்கப்பா காதுல எப்படியோ விழுந்துடுத்து ."ஏன், உன் பிரெண்ட் போய் கிணத்துல விழுந்தா நீயும் விழுவியோ? மூளை இருக்காடி உனக்கு? இந்த வீட்டில் இருக்கிற வரைக்கும் அதெல்லாம் ஒண்ணும் பண்ணக் கூடாது. நாளைக்கு கல்யாணம் பண்ணிண்டு அவாவா என்ன வேணும்னாலும் பண்ணுங்கோ, எப்படி வேணும்னாலும் இருங்கோ, அதெல்லாம் உங்க இஷ்டம்." அழுகை குமுறிக் கொண்டு வந்தது எனக்கு. மனசு வெறுத்துப் போய் விட்டது.

கல்யாணம் பண்ணிண்டு எப்படா அந்த வீட்டை விட்டு கிளம்புவோம், சுதந்திரமாய் இருப்போம்ன்னு ஆயிடுத்து. அம்மா பல முறை எடுத்து சொல்ல டிரை பண்ணியிருக்கா. "அப்பா உன் நல்லதுக்கு தான் சொல்லறார், அவரோட கண்டிப்பு நாளைக்கு உன்னுடைய வாழ்க்கைக்கு உன்னை தயார் பண்றதுக்கு தான்.". "சும்மா சப்பை கட்டு கட்டாதேம்மா, அப்பா ஒரு killjoy, அவர் குணமே அதுதான்".

# ஹிட்லர் (சிறுகதை)

கல்யாணம் ஆகி 18 வருஷம் ஆயாச்சு. பகவான் அருளில் நல்ல கணவர் எனக்கு. மணியாய் இரண்டு பெண்கள். என் பெண்களை வளர்க்கும் போது ஒரே எண்ணம் தான் எனக்கு. “எங்கப்பா எங்க வாழ்க்கையை  பண்ணா மாதிரி, நான் என் குழந்தைகள் வாழ்க்கையை ஆக விட மாட்டேன். எங்கப்பாவின் கொடுங்கோலுக்கு முற்றும் எதிரா டெமாக்ரடிக்காக வளர்ப்பேன் என் குழந்தைகளை” என்று சூளுரைத்து வளர்த்தேன் நான், என் பெண்களை. என் ஒரே நோக்கம், எந்த பிரச்னை என்றாலும் என் குழந்தைகளால் என்னை அப்ரோச் செய்ய முடியனும். எல்லா விஷயத்திலும் அவர்களை கலந்துப்பேன்.

ரீசன் பண்ணுவேன். என் கணவர் கூட "அவா சின்ன குழந்தைகள். எல்லா விஷயத்துலயும் அவா ஒபினியன் கேக்கறது அவசியம் இல்லை. அவாளுக்கு அந்த மெச்சூரிட்டி வர வரைக்கும் எல்லா விஷயமும் அவா  கிட்ட விவரிக்கனும் அப்படீன்னு  அவசியம் இல்லை" ன்னு எல்லாம் சொல்லுவார். ஆனால் என் மனக்கண்ணில்  எங்கப்பாவிடம் நான் சேலன்ஞ் பண்றா மாதிரி ஒரு காட்சி அப்பப்ப தெரியும், "நான் எப்படி வளர்த்துக் காண்பிக்கிறேன் பாரு, என் குழந்தைகளை. நாங்க நல்ல நண்பர்கள் மாதிரி. எங்களுக்குள் எந்த ஒளிவு மறைவும் கிடையாது, தெரியுமா?"

என் பெண்ணிற்கு 18 வயசு முடிந்த சமயம், ஒரு வீக் எண்டில்  குரூப் ஸ்டடி ன்னு அவள் ஃபிரெண்ட் வீட்டுக்கு போனாள். சனிக்கிழமை ராத்திரி 11 மணிக்கு ஒரு கால் வருது. உங்க பெண் ஆக்சிடெண்ட் ஆகி ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆயிருக்கான்னு. ஒண்ணும் புரியாமல் பதறி அடித்து நானும் என் கணவரும் ஓடினோம். கையில் ஃப்ராக்சர், முகத்தில் சிராய்ப்புன்னு குழந்தை படுக்கையில் கிடந்தாள். வயிறு கலங்கியது. மனது பதறியது. பெற்ற குழந்தை ஆஸ்பத்திரி படுக்கையில் கிடப்பதை பார்ப்பது  போல ஒரு கொடுமை வேறு இல்லை.

முதல் ஷாக் போய், டாக்டரிடம் பேசிய பின் சீரியஸ் ஆ ஒண்ணும் இல்லை. முகத்தில் வெறும் சிராய்ப்பு தான், வலது கையில் எலும்பு முறிவு. "உங்க பெண் ரொம்ப லக்கி, தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று" ன்னு டாக்டர் சொன்னதற்கு அப்புறம் தான் மூச்சே வந்தது. பெண்ணிற்கு ஒன்றும் சீரியஸ் இல்லைன்னு நிச்சயம் பண்ணிண்டதற்கு அப்புறம் முணுமுணுன்னு ஒரு கோபம் வர ஆரம்பித்தது.

"என்னடி, சுமதி வீட்டில் குரூப் ஸ்டடி பண்ணனும், ஃபிஸிக்ஸ் ரொம்ப கஷ்டமா இருக்குன்னு தானே போன? எங்க போனேள் இந்த ராத்திரியில்? இன்னும் 3 பேருக்கு அடிபட்டு

இருக்குன்னு சொன்னாளே, சுமதிக்கும் இன்னும் ரெண்டு பாய்ஸ்க்கும், யாரு அந்த பசங்க, எப்படி எனக்கு சொல்லாம போன?", ஆஸ்பத்திரின்னு கூட பார்க்காம கோபத்தில் கேள்விகள் பொங்கிண்டு வந்தது. "என்னம்மா, சுமதியோட கசின்ஸ் வந்திருந்தா, சும்மா படிச்சுண்டேயிருந்தா மைண்ட் மரத்து போயிடும். ஜாலியா டிரைவ் போய்ட்டு வரலாம்னு கூப்பிட்டா, அதான் போனேன். இதுல என்ன இருக்கு?", ரொம்ப காஷுவல் ஆ அவள் பேசினப்ப அந்த ஒரு மணி நேரம் அவளை ஆஸ்பத்திரியில் பார்த்து, டாக்டரிடம் பேசிய வரைக்கும் மனது பட்ட பாடு ஞாபகம் வந்து, சுரீர்னு கோபம் வந்தது. “என்னடி இவ்ளோ சாதாரணமா சொல்றே, என்ன பாடு பட்டோம் தெரியுமா நானும் உன் அப்பாவும்? கொஞ்சம் கூட பொறுப்பு இல்லாமல் பேசறியே நீ? டிரைவ் போறதுக்கு முன்னாடி ஒரு போன் பண்ணத் தெரியாது உனக்கு?"

"என்னம்மா சும்மா என்னைத் திட்டறே, செல்-ல சார்ஜ் இல்லை. ஒரு மணி நேர டிரைவ் ல என்ன இருக்கு? நீ ஏன் அதிசயமா இவ்ளோ கேள்வி கேக்கறே? இதுவே நாங்க சேப் ஆ வீட்டுக்கு போயிருந்தோம்னா உனக்கு தெரிஞ்சு கூட இருக்காது", கூலா சொன்னாள் பெண். "என்னடி இப்படி பேசறே, சுமதி செல் இல்லைன்னா லேண்ட் லைன்லேர்ந்து ஒரு கால் பண்ண மாட்டியா?", புலம்பினேன் நான். "ரொம்ப போர் அடிக்காதேம்மா நீ. என்னை ப்ளேம் பண்றதுக்கு பதில் உன்னை கேட்டுக்கோ. என்னிக்கு நீ ரூல்ஸ் என்ஃபோர்ஸ் பண்ணியிருக்கே? என்னிக்கு கான்சீக்வன்ஸ் இருந்திருக்கு நாங்க செய்யறதுக்கெல்லாம்? என்னைக் கண்டிச்சு வளர்த்து இருந்தியானா நீ இதெல்லாம் எதிர்பார்க்கலாம். நீ எங்க இஷ்டப்படி எல்லாம் வளைஞ்சே, இப்போ என்னை வந்து கேட்டா?"

முகத்தில் பளீர்னு அறை வாங்கினார் போல் பொறி கலங்கி போய்டுத்து. நான் பொத்தி பொத்தி, என் கண்ணுக்குள் கண்ணாய் வளர்த்த என் பெண் என்னை பார்த்து கேட்டாள், "நீ என்னை இன்னும் கண்டிப்பாய் வளர்த்து இருந்தியானா எனக்கு இப்படி ஆகி இருக்குமான்னு."

என் அப்பாவை நான் கேட்ட கேள்விகள், பேசிய பேச்சுக்கள் கண் முன்னாடி ஒடியது. "நீ உனக்கு எது நல்ல வழின்னு பட்டதோ அப்படி வளர்த்தாய் என்னை. நான் எனக்கு எது சரின்னு பட்டதோ அப்படி வளர்த்தேன் என் குழந்தையை. எனக்கு இப்போ புரிஞ்சுடுத்து அப்பா. நீ என்னை வளர்த்ததில் உன்னோட பெஸ்ட் இண்டென்ஷன்ஸ் தவிர வேற எதுவும் இல்லை. நானும் என் பெண்களை அதே மாதிரி பெஸ்ட் இண்டென்ஷன்ஸ்லதான் வளர்த்தேன். ரொம்ப சாரிப்பா..

"பாஸ்கர், எனக்கு போய் எங்கப்பாவை பார்க்கணும்."

**எழுதியவர்: சரஸ்வதி**

## உலக டெஸ்ட் கோப்பை இறுதி ஆட்டத்தில் இந்திய கிரிக்கெட் அணி




இங்கிலாந்து அணியுடன் நடந்து முடிந்த டெஸ்ட் தொடரில் 3-1 என்று பெற்ற வெற்றியுடன் இந்திய கிரிக்கெட் அணி உலக டெஸ்ட் கோப்பை இறுதியாட்டத்தில் நியூசிலாந்து அணியுடன் மோதும் தகுதியைப் பெற்றது. ஒரு கட்டத்தில் உலக டெஸ்ட்  தரவரிசையில் முதலிடத்தில் இருந்த இந்திய அணி, 2020ல் கோவிட்-19 காரணமாக பல தொடர்கள் ரத்து செய்யப்பட்டதால், இந்தத் தொடரை குறைந்தபட்சம் 2-0 அல்லது 3-1 என்ற கணக்கில் வெல்ல வேண்டும் என்றாகியது. சென்னையில் நடந்த முதல் டெஸ்டில் தோல்வியைத் தழுவியவுடன் இந்திய அணியின் வாய்ப்புகள் மங்கி, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விடுமோ எனத் தோன்றியது. ஆனால், மீண்டும் ஒரு முறை இந்த இந்திய அணியினர் தங்கள் தன்னம்பிக்கையையும் மனவலிமையையும் வெளிப்படுத்தினர்.

கடந்த வருடத்தில் இங்கிலாந்து அணி ஜோ ரூட் தலைமையில், தென்னாப்பிரிக்கா, மேற்க்கிந்திய தீவுகள், பாகிஸ்தான்,  இலங்கை போன்ற அணிகளை வென்று பலமான அணியாக கருதப்பட்டது. குறிப்பாக, இந்தியத் தொடருக்கு முன் இலங்கையில் விளையாடிய டெஸ்ட் தொடரில் இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டு 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று தன்னம்பிக்கையோடு இந்தியா வந்தது. இருப்பினும், ஆஸ்திரேலியாவில் பெற்ற வெற்றி, இந்திய மண்ணில் நடைபெறும் போட்டிகள் போன்ற காரணங்களால் இந்திய அணியே தொடரை வெல்லும் என்று அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது. அகமதாபாத்தில் நடைபெறவிருந்த மூன்றாவது டெஸ்ட் பகல்-இரவு போட்டியானதால், ஊதா நிறப்பந்து இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக அமையக்கூடும். அந்த ஒரு போட்டி தவிர மற்ற மூன்று போட்டிகளையும் இந்தியா வெல்லும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், சென்னையில் நடந்த முதல் டெஸ்டில் ஜோ ரூட்டின் இரட்டை சதத்தின் பலத்தில் 578 ரன்கள் குவித்து இந்திய அணியை நெருக்கடியில் ஆழ்த்தியது இங்கிலாந்து. இருப்பினும், ஐந்தாம் நாள் ஆட்ட தொடக்கத்தில் இந்திய அணி பிரிஸ்பேன் போல ஒரு வெற்றியோ அல்லது குறைந்தபட்சம் சிட்னி போல ஒரு ட்ராவோ பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நான்கு ஓவர்களில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜிம்மி

# விளையாட்டு விமர்சனம் (கிரிக்கெட்)




ஆன்டர்சன் இந்திய அணியின் முதுகெலும்பை உடைத்து, இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார். இந்திய அணியின் மட்டைவீச்சு சுமாராக இருந்தது என்றாலும், அணியின் தோல்விக்கு அவர்களின் பலமான பந்துவீச்சே காரணம். குறிப்பாக முதல் இன்னிங்ஸில், அஷ்வின் முனைப்பாக பந்து வீசியபோது, மறுமுனையிலிருந்து அவருக்கு சரியான துணை கிடைக்கவில்லை. இங்கிலாந்து அணியினர் ஷபாஷ் நதீம், வாஷிங்டன் சுந்தர் இருவரின் பந்து வீச்சையும் சுலபமாக எதிர்கொண்டனர்.

முதல் டெஸ்ட் தோல்விக்கு பின் இந்திய அணி துவண்டு விடவில்லை. மாறாக, கூடுதல் முனைப்புடன் இரண்டாவது போட்டியை எதிர்கொண்டது. சுழற்பந்து வீச்சு துறையை பலமாக்க, அணியில் ஷபாஷ் நதீம், வாஷிங்டன் சுந்தர் இவர்களுக்கு பதிலாக அக்ஷர் படேலும், குல்தீப் யாதவும் சேர்க்கபட்டனர். இரண்டாவது டெஸ்ட்டும் சென்னையில் நடந்ததென்றாலும், இம்முறை ஆட்ட விக்கெட் முதல் டெஸ்ட்டிலிருந்து மிகவும் மாறுபட்டிருந்தது. முதல் நாளிலிருந்தே, பந்து பிட்ச் ஆன பிறகு சற்று வேகம் குறைந்து வந்தது. மட்டையாளர்களுக்கு விளையாடுவது எளிதாக இல்லை. மற்ற மட்டையாளர்கள் தடுமாறியபோதும், ரோஹித் ஷர்மா மட்டும் வேறொரு பிட்ச்சில் விளையாடுவது போல அனாயசமாக ஆடி சதமடித்தார். ரோஹித்தும் ரஹானேவும் இணைந்து சேர்த்த 162 ரன்களின் பலத்தில் இந்திய அணி 329 ரன்கள் எடுக்க முடிந்தது. அடுத்து விளையாடிய இங்கிலாந்து அணியினர், அஷ்வினும் அக்ஷரும் இணைந்து வீசிய சுழற்பந்து வலையில் சிக்கித் தடுமாறி 134 ரன்களுக்கு வீழ்ந்தனர். தொடர்ந்து ஆடிய இந்திய அணி, ஒரு கட்டத்தில் 106-6 என்று தடுமாறிக் கொண்டிருந்தது. இங்கிலாந்து அணியினர் மேலும் சில விக்கெட்டுகளைக் கைப்பற்றினால் வெற்றி வாய்ப்பு கிடைக்குமோ என்று எதிர்பார்த்த அந்த தருணத்தில், அஷ்வினும் கோலியும் இணைந்து சிறப்பாக ஆடி 96 ரன்கள் சேர்த்து, இங்கிலாந்து அணியினரின் நம்பிக்கையை தவிடு பொடியாக்கினர். அது வரை போட்டித்தொடரில் இரண்டு அணிகளும் ஏறக்குறைய சமநிலையில் இருந்தாலும், அந்தத்

# விளையாட்டு விமர்சனம் (கிரிக்கெட்)

தருணம் முதல் இந்திய அணியின் கையோங்கி, இங்கிலாந்து அணியின் நம்பிக்கை பல மடங்கு குறைய ஆரம்பித்தது. கோலி வீழ்ந்த பின்னும், அஷ்வின் தொடர்ந்து ஆடி சதமடித்தார். டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற 482 ரன்கள் தேவை என்ற நிலையில், மற்றுமொரு முறை அஷ்வின்-அக்ஷர் ஜோடியின் சுழற்பந்து வலையில் வீழ்ந்து 164 ரன்களுக்கு சுருண்டனர் இங்கிலாந்து அணியினர்.

சென்னையில் இரண்டாவது டெஸ்ட்டில் தொடங்கிய அஷ்வின்-அக்ஷர் ஜோடியின் சுழற்பந்து ஆதிக்கம், அகமதாபாத்தில் நடைபெற்ற மூன்றாவது, நான்காவது டெஸ்ட்டிலும் தொடர்ந்தது. குறிப்பாக, இங்கிலாந்து அணியினர் அக்ஷரின் சுழற்பந்து வீச்சைச் சமாளிக்க முடியாமல் திணறினர். மூன்றாவது டெஸ்ட்டை 2 நாட்களிலும், நான்காவது டெஸ்ட்டை 3 நாட்களிலும் வென்று, போட்டித்தொடரை 3-1 என வென்றது இந்திய அணி.

முதல் டெஸ்ட், முதல் இன்னிங்ஸில் 578 ரன்கள் குவித்த இங்கிலாந்து அணியினர், அதன் பின்னர் வந்த 7 இன்னிங்ஸ்களில் ஒரு முறை மட்டுமே 200 ரன்களைத் தாண்ட முடிந்தது.


**எழுதியவர்: சத்யா திருவேங்கடத்தான்**


# உடல்நலக் குறிப்பு


கடைசி மாத கதம்பம் இதழில், தொலைபேசி மற்றும் பிற ஸ்மார்ட் சாதனங்களை எப்படி சரியாக பயன்படுத்துவது என்று பார்த்தோம்.

இந்த பதிப்பில் தூங்கும் தோரணை (Sleeping posture) குறித்து விரிவாக பார்ப்போம்.

தூக்கம் என்பது நம் அன்றாட வாழ்க்கையில் ஒரு முக்கியமான செயலாகும். நமது உடல் உறக்கத்தில் இருக்கும் போது தான் உணவு செரிமானம்,பித்த சுரப்பை போன்ற தன்னிச்சையான செயல்பாடுகள் பெரும்பாலானவை நடைபெறுகின்றன.ஆகையால் முறையான தூக்கம் மிக இன்றியமையாதது.அதே வேளையில் தூங்கும் தோரணை என்பது மிகவும் முக்கியமானது.




சரியான தலையணையை தேர்வு செய்யுங்கள்.

உங்களுடைய உச்சந்தலை, கழுத்து மற்றும் பின்புறம் ஒரே நேர்க்கோட்டில் இருக்குமாறு உறங்குங்கள்.

உங்களுடைய படுக்கை மிகச் சௌகரியமாக, அதே நேரத்தில் மேற்கூறியவாறு நேர்கோட்டில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.

**தொகுப்பு: ராம்கி கவசேரி**

# வாசகர் கருத்து

இந்த மாத கதம்பம் இதழை பற்றிய உங்கள் கருத்தை தெரிவிக்க விரும்பினால், இந்த படிவத்தின் மூலம் எங்களுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

newsletter.rts@richmondtamilsangam.org எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம்.

நன்றி!




கதம்பம் இதழில் தங்கள் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பயனுள்ள பல விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அனைத்து எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச் சங்க நிர்வாகக் குழுவின் மனமார்ந்த நன்றி.

# புதிர்களுக்கான விடைகள்

**புதிர் [A]:**

| | | | | |
|---|---|---|---|---|
| **10** | 14 | 46 | 142 | 158 |
| 34 | 146 | 94 | 58 | **38** |
| 178 | 62 | 82 | **22** | 26 |

**புதிர் [B]:**

1 + 4 = **5**
2 + 5 = **12**
3 + 6 = **21**
அடுத்த வரிசையில் வர வேண்டிய எண் 8 + 11 = **96.**

1 + 4 = 5 என்பதில் கூட்டல்(+) ஐ பெருக்கல்(*) ஆக மாற்றி, அதன் பெருக்குத்தொகையுடன் முதல் எண்ணைக் கூட்ட வேண்டும் (1 * 4 + 1 = 5). இதே முறையை தொடர (2 * 5 + 2 = 12), (3 * 6 + 3 = 21). ஆக அடுத்த வரிசையில் வர வேண்டிய எண் (8 * 11 + 8 = 96).

**புதிர் ஆக்கம்: சந்துரு**